<u>புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி சாதாரண கூட்டம் சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 13 ஆம் தேதி 2022-ம் ஆண்டு **செப்டம்பர் மாதம் 30ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில்** நகர்மன்ற கூட்ட அறையில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

**திரு.தி.ஜனார்த்தனன்,**
**நகர்மன்ற தலைவர்**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி**

<u>பொருள் எண்.1</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.19009/2022/SBM-1 நாள்.04.08.2022ல் தெரிவித்துள்ளபடி "SBM 2.0" திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டம், புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி , வார்டு எண்.12ல், நம்பியூர் சாலையில் ஏற்கனவே குப்பைகள் தேக்கி வைக்கப்பட்டுள்ள நீர்நிலை பகுதியில் (சர்வே எண்.197) உள்ள 21824.00 க.மீ குப்பைகளை உயிர் சுரங்கம் முறையில் (Bio Mining ) அகற்றி அவ்விடத்தை நீர்நிலையாக மாற்றுதல் பணிக்காக ரூ.170.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளதை ஆய்வு செய்து அறிக்கை வழங்கக் கோரி இயக்குநர், சுற்றுச்சூழல் ஆய்வு மையம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதை தொடர்ந்து ஆய்வுக்கட்டணமாக ரூ.1,77,000/— செலுத்தக்கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**(ந.க.எண்.1241/2022/இ1)**

அலுவலக குறிப்பு:—

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது
**தீர்மான எண்.135**

<u>பொருள் எண்.2</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணியில் தனியார் ஒப்பந்த அடிப்படையில் 1 முதல் 6 வார்டுகளில் 41 தூய்மை பணியாளர்கள் விபிஎன் பில்டர்ஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4861/P3/2018 நாள்.28.02.2018 அனுமதியின் படி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.25/2016/எச்1 நாள்.06.06.2019ன் படி பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.25/2016/எச்1 நாள்.30.06.2019ன் படி நீட்டிப்பு செய்து பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 30.04.2022 உடன் முடிவடைவதால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரை ஒரு மாதம் (01.09.2022 முதல் 30.09.2022 வரை) பணியினை நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்பொழுது மேலும் ஒரு மாதம் (01.10.2022 முதல் 31.10.2022 வரை) விபிஎன் பில்டர்ஸ், திருப்பூர் ஒப்பந்ததாரர் அவர்களை பணி செய்ய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.25/2016/எச்1)

அலுவலகக்குறிப்பு :–

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.136**

**பொருள் எண்.3**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு பவானிசாகர் மற்றும் அண்ணா நகர் நீரேற்று நிலையங்களில் குடிநீர் பராமரிப்பு பணிக்காக நான்கு நபர்களை தனியார் மூலமாக பணி அமர்த்தி கொள்ளும் பணிக்கு திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண். இ1/387/2017 நாள்.27.05.2020ல், 01.06.2020 முதல் 31.05.2021 வரை ஓராண்டு ஒப்பந்த காலத்திற்கு நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோர கால தாமதம் ஆகும் என்பதால், குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணி என்பதால், இப்பணியின் அவசர அவசியம் கருதி தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் 01.09.2022 முதல் 30.09.2022 வரை ஒப்பந்த காலத்தை நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. தற்போது மேற்கண்ட ஒப்பந்தகாலம் 30.09.2022 உடன் முடிவடைவதால் குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணியாக உள்ளதாலும், தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் மேலும் ஒரு மாத காலத்திற்கு 01.10.2022 முதல் 31.10.2022 வரை ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க. எண்.387/2017/இ1)

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.137**

**பொருள் எண்.4**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவலாக காணப்படுகிறது. இருப்பினும் இந்நகராட்சி பகுதியில் இதுவரை டெங்கு காய்ச்சலால் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் தடுப்பு நடவடிக்கைகள் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் வாயிலாக திறம்பட மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் ஏற்படா வண்ணம் முற்றிலும் தடுக்கப்படும் வரை இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்வது அவசியமாகிறது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி 10 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் திரு.வி.ஜெயராஜ், ஒப்பந்ததாரர், புன்செய்ப் புளியம்பட்டி என்ற தனியார் மூலமாக நகர் மன்ற தீர்மான எண்.125 நாள்.29.05.2020ன் படி டெங்கு காய்ச்சல் தொற்று நோய் தடுப்புப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியினை தொடர்ந்து 01.10.2022 முதல் 31.10.2022 வரை திரு.வி.ஜெயராஜ், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு இப்பணியினை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.447/2017/எச்1)

அலுவலகக்குறிப்பு :–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.138**

பொருள் எண்.5

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும், நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் அடையாள அட்டை வழங்குதல் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.15,000/– மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1571 /2022/சி1)**

அலுவலகக்குறிப்பு :–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.139**

பொருள் எண்.6

இந்நகராட்சியில் பொதுநிதி **2022–23**ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான டிப்பர் லாரி எண். TN 36 AQ 4883–ஐ பழுது நீக்கம் செய்தல் பணிக்காக **07.09.2022** அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதின் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகித பட்டியல் உரை **07.09.2022** அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பீட்டுடன் ஒப்புநோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | **பொதுநிதி 2022–23** புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான டிப்பர் லாரி எண். TN 36 AQ 4883–ஐ பழுது நீக்கம் செய்தல் பணி | 1.00 இலட்சம் | ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார்ஸ், ஈரோடு | 0.01% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | முருகன் ஆட்டோஸ், ஈரோடு | 9.50% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

மேற்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகையாக மதிப்பீட்டை விட **0.01%** குறைவாக கொடுத்துள்ள ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.028/2022/எச்1)**

அலுவலக குறிப்பு:

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.140**

பொருள் எண்.7

இந்நகராட்சியில் பொதுநிதி 2022–23ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான நுண்ணுயிர் உரமாக்கல் மையத்தில் உள்ள உரம் அரைக்கும் இயந்திரத்தில் பழுது நீக்கம் செய்தல் மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணிக்காக 20.09.2022 அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதின் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகித பட்டியல் உறை 20.09.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பீட்டுடன் ஒப்புநோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | **பொதுநிதி 2022–23** புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான நுண்ணுயிர் உரமாக்கல் மையத்தில் உள்ள உரம் அரைக்கும் இயந்திரத்தில் பழுது நீக்கம் செய்தல் மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி | 2.00 இலட்சம் | ALPHA INFO SYSTEMS, ERODE | 21.45% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | FINE AIR SYSTEMS, COIMBATORE | 15.34% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

மேற்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகையாக மதிப்பீட்டை விட 21.45% குறைவாக கொடுத்துள்ள ALPHA INFO SYSTEMS, ERODE அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1412/2021/எச்1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.141**

பொருள் எண்.8

இந்நகராட்சியில் பொதுநிதி 2022–23ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான 13 BOV வாகனங்களுக்கு ஓராண்டிற்கு பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் செய்தல் பணிக்காக 20.09.2022 அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதின் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகித பட்டியல் உறை 20.09.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பீட்டுடன் ஒப்புநோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | **பொதுநிதி 2022–23** புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான 13 BOV வாகனங்களுக்கு ஓராண்டிற்கு பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் செய்தல் பணி | 3.00 இலட்சம் | Green Tech Solution, Coimbatore | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | AR4 Tech Pvt Ltd, Coimbatore | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

மேற்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகையாக கொடுத்துள்ள Green Tech Solution, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1784/2019/எச்1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.142**

**பொருள் எண்.9**

இந்நகராட்சியில் பொதுநிதி 2022–23ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் நகர் பகுதிகளில் உள்ள கட்டிட கழிவுகள், மண்மேடுகள் மற்றும் Slit கழிவுகளை JCB கொண்டு அகற்றுதல் பணிக்காக 27.09.2022 அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதின் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகித பட்டியல் உரை 27.09.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பீட்டுடன் ஒப்புநோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | **பொதுநிதி 2022–23** புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் நகர் பகுதிகளில் உள்ள கட்டிட கழிவுகள், மண்மேடுகள் மற்றும் Slit கழிவுகளை JCB கொண்டு அகற்றுதல் பணி | 5.00 இலட்சம் | திரு.சி.சிதம்பரம், புன்செய்ப் புளியம்பட்டி | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.வி.ஜெயராஜ், புன்செய்ப் புளியம்பட்டி | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

மேற்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகையாக கொடுத்துள்ள திரு.சி.சிதம்பரம், புன்செய்ப் புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
**(ந.க.எண்.1248/2022/ எச்1)**

அலுவலக குறிப்பு:

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.143**

**பொருள் எண்.10**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு பணிக்காக அமைக்கப்பட்டுள்ள Chlorination Plant-ஐ பழுது ஏற்படா வண்ணம் வருடாந்திர பராமரிப்பு செய்தல் பணி அவசியமான ஒன்றாகும். எனவே அதற்காகும் உத்தேச மதிப்பீடு ரூ.1.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1585 /2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.144**

**பொருள் எண்.11**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள **AMRUT 2.0** திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 125 நாள்.09.09.2022ல் ரூ.52.07 கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு தேவையான மதிப்பீடுகள், வரைபடங்கள், திட்ட அறிக்கைகள் ஆகியவற்றை தயார் செய்து தொழில்நுட்ப அனுமதி பெற்றுத்தரவும், மேலும் மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு மற்றும் ஒப்பந்த நிபந்தனைகள் தயார் செய்து கொடுக்கும் வரைக்கும் தனியார் கலந்தாலோசகர் (Consultant) நியமிக்கவும், ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.35.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1299/2020/இ1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொண்டமைக்கு மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.145**

**பொருள் எண்.12**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04, 09, 10, 12, 15 மற்றும் 18 ஆகிய வார்டுகளில் உள்ள பழுதடைந்த சிறுபாலங்களை சீரமைத்தல் பணிக்காக ஆகும் செலவினம் தொகை ரூ.4.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1587/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.146**

**பொருள் எண்.13**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லை ஆரம்பிக்கும் பகுதி மற்றும் முடிவு பகுதிகளில் “ புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லை ஆரம்பம் மற்றும் எல்லை முடிவு ” என எட்டு இடங்களில் பெயர் பலகை அமைத்தல் மற்றும் தெரு பெயர் குறிப்பிட்டுள்ள பெயர் பலகைகளில் ஏற்கனவே ஒட்டப்பட்ட கிழிந்த ஸ்டிக்கர்களை மாற்றி அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினத்தொகை ரூ.4.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1586 /2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.147**

**பொருள் எண்.14**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு **11.45** இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஏழு எண்ணிக்கைகள் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், மேற்படி தொட்டிகளில் ஏற்கனவே உள்ள குடிநீரின் அளவு தெரியாததாலும், மீண்டும் குடிநீர் நிரப்பும் போது தண்ணீர் நிறைந்து வீணாகிறது. எனவே இதனை தடுக்கும் பொருட்டும், குடிநீரின் அவசியம் கருதி மேற்கண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் அளவுமானி பொருத்துதல் மற்றும் i Tank என்னும் செயலியினை செயல்முறைப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினத்தொகை ரூ.4.85 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1607 /2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.148**

**பொருள் எண்.15**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15, நுண்ணுயிர் உரமாக்கல் மையத்தில் சேகரிக்கப்படும் மக்கும் கழிவுகளை உலர்த்தி அரைப்பதற்கு ஏதுவாக தளம் அமைத்தல் பணிக்கு ஆகும் செலவினம் தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1608 /2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.149**

**<u>பொருள் எண்.16</u>**

ஈரோடு மாவட்டம், புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2022–2023ன் கீழ் ரூ.21.00 இலட்சம் மதிப்பீட்டில் அம்மா உணவகம் அருகில் புதிதாக உயிரி மீத்தேனாக்கல் மையம் (Bio Methanation Plant) அமைக்க நகர்மன்ற தீர்மான எண்.114 நாள்.19.07.2022ன் படி அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து 27.07.2022 ஆம் தேதியன்று விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்யுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அதனை தொடர்ந்து 01.08.2022 தேதியன்று இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக பங்களிப்பு தொகை வழங்கக்கோரி இந்நகராட்சி மற்றும் நகராட்சி சுற்றுப்புற பகுதிகளில் உள்ள நிறுவனங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் நாளது தேதிவரை பங்களிப்பு தொகை ஏதும் பெறப்படவில்லை.

மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்களின் கடித ந.க.எண்.27102/2021/கே4 நாள்.02.08.2022ன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு மேற்கண்ட பணியை மேற்கொள்ள அனுமதி வழங்கக்கோரி பரிந்துரை செய்து கடிதம் அனுப்பப்பட்டது. இந்நிலையில் புன்செய்ப் புளியம்பட்டி நவீன எரியூட்டுமிடமானது யாத்ரா அறக்கட்டளை மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட யாத்ரா எரியூட்டுமிடத்தில் ஏற்கனவே உள்ள தகனமேடை அமைக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகிய காரணத்தாலும், அடிக்கடி பழுது ஏற்படுவதாலும் முன்னேற்பாடாக இரண்டாவதாக ஒரு புதிதாக தகன மேடை அமைத்து தரக்கோரியும், அதற்காகும் செலவினத்தொகையில் 50% தொகையை தங்கள் அறக்கட்டளை சார்பாக வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

எனவே, புதிதாக உயிரி மீத்தேனாக்கல் மையம் (Bio Methanation Plant) அமைக்கும் பணிக்கு நாளது தேதிவரை பங்களிப்பு தொகை ஏதும் பெறப்படாததால், நமக்கு நாமே திட்டம் 2022–2023ன் கீழ் மாற்றுப்பணியாக யாத்ரா எரியூட்டுமிடத்தில் ஒரு புதிய தகன மேடை அமைக்கும் பணிக்கு ரூ.26.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1242/2022/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.150**

**<u>பொருள் எண்.17</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலக வளாகத்தைச் சுற்றி படர்ந்துள்ள செடிகளால் நிறைய பூச்சிகள், பாம்புகள் போன்றவை அடிக்கடி அலுவலக வளாகத்தில் சுற்றித்திரியும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும் தற்போது மழை காலம் ஆரம்பம் ஆகும் சூழல் ஏற்பட்டுள்ளதால் இவைகள் அதிகம் பெறுக வாய்ப்பு உள்ளது. எனவே அலுவலக வளாகத்தைச் சுற்றி படர்ந்துள்ள செடி கொடிகளை அகற்றுதல், நகராட்சி அலுவலகத்தின் பின்புறம் உள்ள கேட் மற்றும் அலுவலக கழிப்பிடம் மராமத்து பணி மேற்கொள்ளுதல் மற்றும் நகர்மன்ற கூட்ட அரங்கில் மைக் பழுது சரி

செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினத்தொகை ரூ.4.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1609/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.151**

**<u>பொருள் எண்.18</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.04, சுல்தான் ரோடு, வார்டு எண்.12, காந்திநகர் மற்றும் வார்டு எண்.14, தங்கசாலை தெரு, நகராட்சி அலுவலகத்தில் உள்ள திறந்தவெளி கிணற்றில் அதிக அளவில் வளர்ந்துள்ள செடி கொடிகளை அகற்றி தூர்வாருதல், கிணற்றினை சுற்றி பூச்சு வேலை மேற்கொள்ளுதல் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு கருதி கிணற்றின் மேல் பகுதியை இரும்பு மூடி கொண்டு மூடுதல் (கிரில்) போன்ற பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினத்தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1610/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.152**

**<u>பொருள் எண்.19</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5, பன்னீர்செல்வம் தெரு, வார்டு எண்.8, மறைமலையடிகள் தெரு, வார்டு எண்.9, சொக்கப்பா தெரு மற்றும் வார்டு எண்.11, பாரதி தெருவில் உள்ள திறந்தவெளி கிணற்றில் அதிக அளவில் வளர்ந்துள்ள செடி கொடிகளை அகற்றி தூர்வாருதல், கிணற்றினை சுற்றி பூச்சு வேலை மேற்கொள்ளுதல் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு கருதி கிணற்றின் மேல் பகுதியை இரும்பு மூடி கொண்டு மூடுதல் (கிரில்) போன்ற பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினத்தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1611/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.153**

<u>பொருள் எண்.20</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தையில் சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு கீழ்கண்ட விவரப்படி உள்ள காலத்திற்கு 16.09.2022—ஆம் தேதியன்று மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்படி மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச ஏல கேள்வி கோரிய கீழ்கண்டுள்ள நபருக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | உரிமம் விவரம் | மறு ஏலத்தில் உயர்ந்த கேள்வி கேட்ட ஏலதாரர்களின் பெயர் | அரசு மதிப்பு தொகை ஆண்டு ஒன்றிற்கு ரூ. | மறு ஏலத்தில் கேட்கப் பட்ட உயர்ந்த ஏலக் கேள்வி தொகை ஆண்டு ஒன்றிற்கு ரூ. | மூடி முத்திரையிடப் பட்ட வரப்பட்ட ஒப்பந்தப் புள்ளியின் உயர்ந்த ஏல கேள்வி | குத்தகை காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | புன்செய் புளியம்பட்டி நகராட்சி தினசரி சந்தையில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் மற்றும் மேற்படி சந்தையில் உள்ள கடைகளுக்கு தினசரி கட்டணம் வசூலிக்கும் உரிமம். | திரு.கே.சுரேஷ் | 1415000/— | 1420000/— | ஒப்பந்தப் புள்ளி ஏதும் வரவில்லை | 17.09.2022 முதல் 31.03.2023 வரை அல்லது தினசரி சந்தைக்கென புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டிடம் கட்டி முடித்து ஒப்படைக்கும் நாள் வரை இதில் எது முன்னரோ அது வரை உள்ள காலத்திற்கு |

(ந.க.எண்.1702/2020/அ1)

<u>அலுவலகக்குறிப்பு :</u>

1. மேற்கண்ட குத்தகை இனமான தினசரி சந்தையில் சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு முறையாக நாளிதழில் விளம்பரப்படுத்தியும், பொதுமக்களுக்கு ஏல அறிவிப்பு வினியோகம் செய்தும் 16.09.2022ம் தேதியன்று மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டது.
2. மேற்படி குத்தகை இனத்திற்கு கேட்கப்பட்ட உயர்ந்தபட்ச ஏல கேள்வி, அரசு மதிப்பைவிட கூடுதலாக உள்ளதாலும், இந்த ஆண்டு 2022—2023—ஆம் ஆண்டு கேட்புத் தொகையை விட கூடுதலாக உள்ளதாலும், உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி தொகை கோரியுள்ள மேற்படி ஏலதாரருக்கு உரிமம் வழங்கலாம். மேலும், 17.09.2022 முதல் 31.03.2023 வரை அல்லது

தினசரி சந்தைக்கென புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டிடம் கட்டி முடித்து ஒப்படைக்கும் நாள் வரை இதில் எது முன்னரோ அது வரை உள்ள காலத்திற்கு குத்தகை அனுமதிக்கலாம்.

3. அவசர அவசியம் கருதி மேற்கண்ட குத்தகை இனத்திற்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.154**

<u>பொருள் எண்.21</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள மிதி வண்டி மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு கீழ்க்கண்ட விபரப்படி உள்ள காலத்திற்கு 16.09.2022–ஆம் தேதியன்று குறுகிய கால மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்படி குறுகிய கால மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில், கீழ்க்கண்ட விபரப்படி உள்ள ஒரு நபர் மட்டுமே கலந்து கொண்டு உயர்ந்தபட்ச ஏல கேள்வி கோரியுள்ளார். ஒப்பந்தப்புள்ளி எவரும் வழங்கவில்லை. மறு ஏலம் கோரலாம். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | உரிமம் விவரம் | மறு ஏலத்தில் உயர்ந்த கேள்வி கேட்ட ஏலதாரர்களின் பெயர் | அரசு மதிப்பு தொகை ரூ. | மறு ஏலத்தில் கேட்கப் பட்ட உயர்ந்த ஏலக் கேள்வி தொகை ரூ. | மூடி முத்திரை யிடப் பட்ட வரப்பட்ட ஒப்பந்தப் புள்ளியின் உயர்ந்த ஏல கேள்வி | குத்தகை காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | புன்செய் புளியம்பட்டி நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள மிதி வண்டி மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் சுங்கம் வசூலிக்கும் உரிமம். | திரு. ஏ. ரவிச்சந்திரன் | 600000/– | 308000/– | ஒப்பந்தப் புள்ளி ஏதும் வரவில்லை | ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு |

**ந.க.எண்.1308/2014/அ1**
அலுவலகக்குறிப்பு:

1) மேற்படி குத்தகைதாரர் பேருந்து நிலையத்தில் உள்ள மிதி வண்டி மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு 01.04.2017 முதல் 31.03.2020 வரையுள்ள மூன்றாண்டு காலத்திற்கு குத்தகைக்கு எடுத்து நிலுவையின்றி குத்தகைத் தொகை முழுவதையும், செலுத்தியுள்ளார். மேலும், இவரே மேற்படி குத்தகையினத்தை 01.04.2020 முதல் 31.03.2023 வரையுள்ள மூன்றாண்டு காலத்திற்கு குத்தகைக்கு எடுத்தார். மேலும் உலகையே உலுக்கிய Covid-19 கொரோனா நோய் தொற்று காரணமாக மார்ச் 2020 முதல் செப்டம்பர் 2020 வரை பொது ஊரடங்கு அமலில் இருந்த காலத்தில் பேருந்துகள் முற்றிலும்

ஓடாத காரணத்தால், மேற்படி குத்தகையினத்தை நடத்த இயலாது எனத் தெரிவித்து குத்தகையை ரத்து செய்யுமாறு கடிதம் வழங்கியுள்ளார். இருப்பினும் 01.04.2020 முதல் 31.03.2021 வரை மேற்படி குத்தகையினத்திற்கான கேட்புத் தொகை ரூ.11,55,000/– குத்தகைதாரரின் வைப்புத் தொகையிலிருந்து மேற்படி கேட்புத் தொகை முழுவதையும், செலுத்தியுள்ளார். எனவே, மேற்படி குத்தகைதாரர் திரு.ஏ. ரவிச்சந்திரன் என்பவரால் இந்நகராட்சிக்கு இதுநாள் வரை நிதியிழப்பு ஏதுமில்லை.

2) மேற்படி ஏலத்தில் கலந்து கொண்ட திரு.ஏ.ரவிச்சந்திரன் என்பவர் இந்நகராட்சியின் முன்னாள் குத்தகைதாரர் ஆவார். இவர் தினசரி சந்தையை குத்தகைக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரையுள்ள காலத்திற்கு சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு எடுத்து நிலுவையின்றி குத்தகைத் தொகையினை செலுத்தியுள்ளார். மேலும், 01.04.2021 முதல் 31.03.2024 வரையுள்ள மூன்றாண்டு காலத்திற்கு மேற்படி தினசரி சந்தையில் சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.ஏ.ரவிச்சந்திரன் என்பவரின் மனைவியான திரு.ஆர்.ஜோதிகமலம் என்பவர் பெயரில், குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்துள்ளார். நகர்மன்ற தீர்மான எண்.118 நாள் 19.07.2022–ன்படி மேற்படி தினசரி சந்தையின் குத்தகை தொகை ரூ.10,37,246/– 31.07.2022 வரை நிலுவையில் இருந்ததற்கு, அன்னாரின் மேற்படி குத்தகையை 31.07.2022–ம் தேதி முதல் ரத்து செய்து மேற்படி குத்தகைதாரர் இருவரையும், நகராட்சியில் நடைபெறும் எந்தவொரு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளாதவாறு மேற்படி நகர்மன்ற தீர்மானத்தில் தன்னிச்சையாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் மேற்படி குத்தகைதாரரின் நிலுவைத்தொகை ரூ.10,37,246/– தொடர்ந்து அறிவிப்புகள் வழங்கப்பட்டு வருகிறது.

3) கொரோனா நோய் தொற்று காலத்திற்கு பின்பு நகராட்சி பேருந்து நிலையத்திற்குட்பட்ட பகுதியில் தனியார் தனியார் இருசக்கர வாகன காப்பகங்கள் எட்டு எண்ணிக்கையில் இயங்கிக்கொண்டிருக்கிறது. மேலும், பேருந்து நிலையத்திற்கு வரும் பேருந்துகளின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து விட்டதாலும், மேற்படி குத்தகை இனத்திற்கு இறுதியாககுத்தகைக்கு விடப்பட்ட மூன்றாண்டு சராசரித்தொகை ரூ.5,35,925/– ஆகும். கொரோனா நோய்த்தொற்று காலத்திற்கு பின்பு மேற்படி குத்தகை இனத்தை பிப்ரவரி 2021 முதல் 12 முறை தொடர்ந்து மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில், இதுநாள் வரை ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. இதனால் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்ட வண்ணமாகவே உள்ளது. தற்போது 13–வது முறையாக 16.09.2022–ம் தேதியன்று அரசு மதிப்பாக ரூ.6,00,000/– என நிர்ணயிக்கப்பட்டு, குறுகிய கால மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில், ஒரு நபர் திரு.எ.ரவிச்சந்திரன் என்பவர் மட்டுமே கலந்து கொண்டு உயர்ந்தபட்ச ஏலக் கேள்வியாக ரூ.3,08,000/– கோரியுள்ளார்.

ஆகவே நகராட்சிக்கு நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு அரசு மதிப்பை ரூ.4,50,000/– ஆக நிர்ணயம் செய்து மறு ஏலம் கோர மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. மன்றம் முடிவு செய்யலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**

**தீர்மான எண்.155**

பொருள் எண்.22

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஆணையாளர் அறை, நகர்மன்ற தலைவர் அறை மற்றும் நகர்மன்ற கூட்ட அரங்கம் ஆகிய இடங்களில் எட்டு எண்ணிக்கைகள் கொண்ட தலைவர்கள் புகைப்படங்கள் வைக்கப்பட்டது. மொத்தம் எட்டு புகைப்படங்களுக்கு பட்டியல் தொகை ரூ.28,000/– அலங்கார் ஸ்டுடியோஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1587/2022/சி1)**

அலுவலகக்குறிப்பு :-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.156**

பொருள் எண்.23

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள பயன்பாடின்றி இருக்கும் கீழ்கண்ட பழைய உபகரணங்கள் அனைத்தும் பொது ஏலம் நடத்தி அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருள்களின் விபரம் | எண்ணிக்கைகள் |
|---|---|---|
| 1. | குப்பை தொட்டிகள் (Dumber Bins) | 27 |
| 2. | தள்ளுவண்டிகள் (Push Carts) | 17 |
| 3. | விளம்பர பலகை ஸ்டேண்டு | 3 |
| 4. | Portable Toilet Cabin | 3 |
| 5. | கீழ்கண்ட இடங்களில் உள்ள உபயோகமற்ற இரும்பு குடிநீர் குழாய்கள் (அனைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைந்துள்ள இடங்கள், அண்ணாநகர் நீருந்து நிலையம் மற்றும் பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையம்) | – |

**(ந.க.எண். 1586/2022/இ1)**

அலுவலகக்குறிப்பு :-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.157**

பொருள் எண்.24

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள அனைத்து பிரிவுகளுக்கும் கணினிகள் மற்றும் பிரிண்டர் தேவைப்படுவதால், அதற்காகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1584/2022/இ1)**

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.158**

பொருள் எண்.25

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்திற்கு 2022–23ஆம் ஆண்டிற்கு தேவையான புத்தகங்கள், படிவங்கள், எழுது பொருட்கள் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வாங்கிக் கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1568/2022/சி1)**

அலுவலக குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.159**

பொருள் எண்.26

கூடுதல் ஆட்சியர் (வ) /திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண். 3929/2022/அ3 நாள். 29.07.2022ல் 2021–2022 ஆம் ஆண்டிற்கு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நீலகிரி தொகுதி மக்களவை உறுப்பினர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு, ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி வார்டு எண்.15, வாரச்சந்தை பகுதியில் 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட தொட்டி கட்டுதல் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு பணி செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் மதிப்பீடுகள் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டதற்கினங்க, மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு மாவட்டம் அவர்களுக்கு 05.08.2022 ஆம் தேதியன்று மதிப்பீடுகள் மற்றும் சாத்தியக்கூறு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர்/தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு மாவட்டம், ஈரோடு அவர்களின் செயல்முறை நடவடிக்கை ந.க.எண். 3929/2022/அ3 நாள். 18.08.2022ன் படி மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.

எனவே இப்பணிக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்க ரூ.35.00 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1337/2022/இ1)**

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொண்டமைக்கு மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.160**

பொருள் எண்.27

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் கழிவுநீர் டாடா ஏஸ் TN 36 AZ 7382 வாகனத்திற்கு தகுதிச்சான்று பெற பழுது நீக்கம் செய்யவேண்டியுள்ளதால் அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனை வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.1511/2022/எச்1)

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

அ) பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.161**

<u>பொருள் எண்.28</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் டாடா ஏஸ் வாகனம் TN 36 X 3791 வாகனத்திற்கு தகுதிச்சான்று பெற பழுது நீக்கம் செய்யவேண்டியுள்ளதால் அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனை வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.1510/2022/எச்1)

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

அ) பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.162**

ஆணையாளர்
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி